இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 31.12.2025

யார் கொடுக்கும் தைரியம் இது?

கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு டெல்லியில் உள்ள கத்தீட்ரல் மீட்பின் தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். “டெல்லி தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் வழிபாட்டில் கலந்து கொண்டேன். இந்த வழிபாடு காலத்தால் அழியாத அன்பு, அமைதி, இரக்கத்தின் செய்தியை பிரதிபலித்தது. கிறிஸ்துமஸ் விழாவின் உணர்வு, நமது சமூகத்தில் நல்லெண்ணம், நல்லிணக்கத்தை ஊக்குவிக்கட்டும்” என்று குறிப்பிட்டுள்ளார். இதனைப் படிக்கும் போது, பிரதமரின் நல்லிணக்க, நல்லெண்ண உணர்வை நாம் மெச்சத் தோன்றும்.

அதேநேரத்தில் **இந்தியாவில் பல மாநிலங்களில் என்ன நடந்தது? கிறிஸ்துமஸ் கொண்டாடிய மக்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது. பிரதமர் சொன்ன நல்லெண்ணம் எங்கே? நல்லிணக்கம் எங்கே போனது? நல்லிணக்கம் பேசிய பிரதமர், நல்லிணக்கம் கெடும் போது கண்டித்தாரா என்றால் இல்லை.**

★ சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் கிறிஸ்துமஸ் அமைப்புக்கு எதிராக பா.ஜ.க. ஆதரவு அமைப்புகள் வன்முறையை நடத்தி இருக்கிறார்கள். மேக்னட்டோ வணிக வளாகத்தில் பணியாற்றும் ஊழியர்களிடம் சாதி, மதம் பற்றி கேள்வி கேட்டு மிரட்டல் விடுத்துள்ளார்கள். அந்த வளாகம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்துக்காக விளக்கு அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. ‘பெரிய எண்ணிக்கையிலான நபர்கள் வந்து இங்குள்ள ஊழியர்களிடம் அடையாள அட்டைகளை வாங்கிப் பார்த்தார்கள். இந்துக்களா, கிறிஸ்தவர்களா என்று கேட்டார்கள். அவர்கள் நடத்திய தாக்குதலில் 20 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம் அடைந்தது.” என்று அந்த வணிக வளாகப் பொறுப்பாளர் பேட்டி அளித்துள்ளார்.

★ மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரின் சில பகுதிகளில் கிறிஸ்தவ வழிபாட்டுக் கூட்டங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட கொண்டாட்டத்தில் பார்வையற்ற சிறுமியைக் கேலி செய்து பேசி இருக்கிறார் பா.ஜ.க. பிரமுகர்.

★ டெல்லியில் ஒரு பகுதியில் சாண்டா கிளாஸ் தொப்பி அணிந்த பெண்களை விரட்டி அடித்திருக்கிறது ஒரு கும்பல்.

★ ஒடிசாவில் கிறிஸ்துமஸ் தொப்பிகளை விற்ற ஒருவன் கொடுமைப் படுத்தப்பட்டு அடித்து விரட்டப்பட்டுள்ளான்.

★ உத்தரகாண்டில் ஒரு உணவு விடுதியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் தடுக்கப்பட்டுள்ளது.

★ உத்தரப்பிரதேச மாநில அரசு கிறிஸ்துமஸ் நாளில் விடுமுறையை ரத்து செய்து, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த நாளைக் கொண்டாட கல்வி நிலையங்களுக்கு கட்டளை இட்டது.

★ கேரளாவில் அஞ்சல் நிலையங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பா.ஜ.க.வுடன் தொடர்புடைய பி.எம்.எஸ். தொழிற்சங்கத்தினர், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கீதங்களைப் பாட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாகவும், இதனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை திருவனந்தபுரம் தபால் நிலைய தலைமை அதிகாரி ரத்து செய்ததாகவும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் சொல்லி இருக்கிறார். பாலக்காடு மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது சங் பரிவார் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.

★ அசாமில் பள்ளி ஒன்றில் செய்யப்பட்டு இருந்த கிறிஸ்துமஸ் அலங்காரங்களை ஒரு கும்பல் புகுந்து சீர்குலைத்துள்ளது. நான்கு பேர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள். இது தொடர்பாக அசாம் மாநில காவல் துறை அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியில், “வி.எச்.பி. அமைப்பின் நல்பாரி மாவட்டச் செயலாளர், மாவட்டத் இணைச் செயலாளர், துணைச் செயலாளர், பஜ்ரங் தளம் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகிய நால்வரைக் கைது செய்து உள்ளனர். சம்பந்தப்பட்ட பள்ளிக்கு வந்த அவர்கள், ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று முழக்கம் எழுப்பியதுடன் பள்ளி வளாகத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நடத்தக் கூடாது என்று எச்சரித்தனர். கிறிஸ்துமஸ் பொருட்கள் விற்ற கடைகளைக் கொளுத்தினர்.” என்று சொல்லி இருக்கிறார். இதனை அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் ஹிமந்த விஸ்வ சர்மா ஒப்புக் கொண்டுள்ளார்.

– நாடு எத்தகைய அச்சம் மிகு சூழ்நிலையை பா.ஜ.க., பஜ்ரங் தள், சங் பரிவார் அமைப்புகளால் சந்தித்து வருகிறது என்பதற்கு இவை ஒரு வாரத்துக் காட்டுகள் ஆகும். கிறிஸ்துமஸ் நேரத்தில் நடக்கும் சம்பவங்கள் என்பதால் ஊடகங்களில் வெளியாகிறது. மற்ற நேரமாக இருந்தால் அந்த மாநிலத்தை விட்டு இவை வெளியில் வராது.

தமிழ்நாடு ஆயர் பேரவைத் தலைவர் ஜார்ஜ் ஆரோக்கியசாமி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், “கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அந்த மதத்தினரை மட்டும் பாதிப்பதில்லை. அது இந்திய சமூகத்தின் ஒற்றுமை, மனிதநேயம், அரசியலமைப்பின் மதச்சார்பின்மை ஆகிய அடிப்படை மதிப்புகளைப் பாதிக்கிறது. இத்தகைய தாக்குதல்கள் சிறுபான்மை சமூகங்களின் பயம், பாதுகாப்பற்ற உணர்வு, சட்டத்தின் மீது நம்பிக்கை குறைதல், மதங்களுக்கு இடையிலான உறவுகளில் விரிசல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன” என்று சொல்லி இருக்கிறார்கள். இதுதான் உண்மை ஆகும்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், பா.ஜ.க. அதிகம் தலைதூக்கும் மாநிலங்களில் எத்தகைய அச்சம்மிகு சூழல் இருக்கும் என்பதை இவை எடுத்துக் காட்டுகிறது. ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து கலவரத்தை உருவாக்குவதும், அதனை மதத்தைக் காப்பதற்காகச் சொல்லிக் கொள்வதும் பா.ஜ.க. ஆதரவு அமைப்புகளின் பசப்பான வார்த்தைகள் ஆகும்.

தங்களது சுயநலனுக்காக ரத்தம் குடிக்க அலையும் கும்பலாக அது இருக்கிறது என்பதை தமிழ்நாடு உணர்ந்ததைப் போல மற்ற மாநிலங்களும் தெளிவாக உணர வேண்டும்.

இவை அனைத்தும் யார் கொடுக்கும் தைரியத்தால் நடக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுக்கும் தைரியத்தால் தான் நடக்கிறது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சம்பா பருவ நெல் கொள்முதல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், முனைவர் கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன், டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் அலுவலர்களுடன் நேற்று முன்தினம் (29.12.2025) நடைபெற்றது.

மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

பெரம்பலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தலைமையில் 5 ஆயிரம் பேர் பங்கேற்பு!

பெரம்பலூர், டிச. 31 -

மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புச்சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப்பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து, திட்டத்தை முடக்குவது, வேலையாட்களை குறைப்பது பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, விவசாயிகள் நம் நாட்டின் முதுகெலும்பு என்று சொன்ன அண்ணல் காந்தியடிகளின் பெயரை இத்திட்டத்தில் இருந்து நீக்குவது, நூறு நாள் வேலையையே இல்லாமல் செய்து, கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச்செயலையும், அதற்கு ஆதரவு தரும் அ.தி.மு.க.வையும் கண்டித்தும், அந்த சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர், வேப்பூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு பா.ஜ.க. அரசைக் கண்டித்து, வின்னதிர கோஷங்கள் முழங்க மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பெரம்பலூர் ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார் வரவேற்புரையாற்றினார்.

இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், 100 நாள் வேலைத்திட்டத்தை பாடையில் ஏற்றிய மோடி அரசே எனவும், தோற்றம் காங்கிரஸ் ஆட்சியில், மறைவு மோடி ஆட்சியில் எனவும் வாசகங்கள் அடங்கிய பாடை கட்டி ஊர்வலமாக எடுத்து வந்து, தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் செ.நல்லதம்பி வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன் ஆகியோர் வரவேற்புரையாற்றினனர். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆலத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆலத்தூர் ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, ஆலத்தூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் ஆகியோரது தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வேப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, வேப்பூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் தி.மதியழகன், வேப்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் சி.ராஜேந்திரன், வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் அழகு.நீலமேகம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பீல்வாடி ராமச்சந்திரன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், தலைமைக் கழகப் பேச்சாளர் மு.விஜயரத்தினம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர்,

ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட கலை இலக்கியப் பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல் பாரூக், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம்,

மாவட்ட இளைஞரணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, குரும்பலூர் பேரூர்க் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.இரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர், லப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர் உசேன், அரும்பாவூர் பேரூராட்சி துணை தலைவர் எஸ்.சரண்யாகுமரன், குரும்பலூர் பேரூராட்சி துணை தலைவர் கீதா துரைராஜ், தம்பை வேல்முருகன், தம்பை தர்மராஜ், பாளை.மணிவண்ணன்,

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சிவா, வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கணேசன், பசும்பலூர் ஜெயபால், அரும்பாவூர் மோகன் உள்ளிட்ட தி.மு.க. மற்றும் தோழமைக்கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் இன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தோழமைக்கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் என மாவட்டம் முழுவதும் மொத்தம் சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

தமிழக முதல்வர் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு

ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி - 8 கிராம் தங்கம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, டிச. 31 -

புதுக்கோட்டை மாநகராட்சி, காவலர் நல சமுதாய கூடத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கும் விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 28.12.2025 அன்று துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஏழை மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமணத்திற்கு அரசின் சார்பில் திருமண நிதி உதவி வழங்கப்படுவதுடன், தாலிக்காக தங்கமும் வழங்கப்பட்டு வருகிறது. பெண்களின் கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டு, நிதி உதவி தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

பெண்களின் கல்வி, சுயமரியாதை மற்றும் சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், திருமணச் செலவுகளால் ஏற்படும் பொருளாதார சுமையை குறைத்து, குடும்பங்களுக்கு பெரும் துணையாக அமைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு சமூகநலக் கொள்கைகளின் வெளிப்பாடாக இத்திட்டம் திகழ்கிறது. இதன் மூலம் இது வரை ஆயிரக்கணக்கான ஏழைப் பெண்கள் பயன் பெற்று, தங்கள் வாழ்க்கையை நம்பிக்கையுடன் தொடங்கியுள்ளனர்.

அந்த வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 129 பெண்களுக்கு ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் 8 கிராம் தங்க நாணயத்துடன் திருமண நிதியுதவி இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

பெண்களின் கல்வி முன்னேற்றத்தையும், சுயமரியாதையும் உறுதிப்படுத்தும் இத்தகைய திட்டங்கள் சமூகத்தில் சம வாய்ப்புகளை உருவாக்கி, பெண்கள் வலிமை பெறும் தமிழகத்தை கட்டியெழுப்பும் அடையாளமாகத் திகழும். எனவே இத்தகைய திட்டங்களை உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட சமூகநல அலுவலர் மே.சியாமளா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, மாவட்ட சமூக நல அலுவலக கண்காணிப்பாளர் ராஜலெட்சுமி, தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை மற்றும் வே.ராஜேஷ், அ.ரெத்தினம், ஞானசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை மாநகராட்சி, காவலர் நல சமுதாய கூடத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கும் விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 28.12.2025 அன்று துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.மே.சியாமளா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.